

திருவொற்றியூர் காலடிப்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையத்தில் தண்டவாளம் அமைக்கும் பணி முடிந்துள்ளது.

### தண்டவாளம் அமைக்கும் பணி முடிந்தது

# வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் இடையே விரைவில் மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம்

திருவொற்றியூர்,நவ.4-

வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை 9 கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரயில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

சுமார் ரூ.3,370 கோடி செலவில் அமைக்கப்பட்டு வரும் இந்த பணிகள் கொரோனா ஊரடங்கு காரணமாக தடைபட்டது.

**தண்டவாளம்**

ஊரடங்கில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து தற்போது மீண்டும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

வண்ணாரப்பேட்டையில் இருந்து விம்கோ நகர் வரை தண்டவாளம் அமைக்கும் பணி முழுவதும் முடிவடைந்துள்ளது. ரெயில் நிலையங்கள் மற்றும் வளைவுகளில் பணிகள் இன்னும் முழுமை அடையவில்லை.

**சோதனை ஓட்டம்**

அவை முடிவடைந்தவுடன் முதலில் என்ஜின் சோதனை ஓட்டமும் அதனை தொடர்ந்து டிசம்பர் மாத இறுதியில் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டமும் நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

வண்ணாரப்பேட்டை-விம்கோநகர் இடையே மொத்தம் 8 மெட்ரோ நிலையங்கள் அமைய உள்ளன. வண்ணாரப்பேட்டையில் இருந்து தண்டையார்பேட்டை சிக்னல் வரை பூமிக்கு அடியில் சுரங்கப்பாதையில் மெட்ரோ ரெயில் செல்ல உள்ளது.

**இணைக்கும் பணி**

தண்டையார்பேட்டையில் பூமிக்கு அடியில் உள்ள நிலையத்தில் இருந்து புது வண்ணாரப்பேட்டை மேம்பாலத்தில் உள்ள நிலையத்தை இணைக்கும் பணி விரைந்து நடந்து வருகிறது.

இதேபோல் ரெயில் நிலைய பணிகளை விரைந்து முடிக்க முழு வீச்சில் பணிகள் நடக்கிறது. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இறுதியில் மெட்ரோ ரெயில் சேவை தொடங்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.